ஜெயங்கொள்ளுவோருக்கான
அறிக்கை

எனது சரீரம் பரிசுத்த ஆவியானவர் தங்கும் ஆலயம்.[1]
இயேசுவின் இரத்தத்தால் நான் மீட்கப்பட்டு,[2]
சுத்திகரிக்கப்பட்டு,[3] பரிசுத்தப்படுத்தப்பட்டேன்.[4]

எனது சரீரத்தின் அவயவங்களான உறுப்பினார்கள்
நீதியின் ஆயுதங்கள்.[5] தேவனின் பணிக்கொன்றும்,
மகிமைக்கென்றும் ஒப்புக்கொடுக்கப்பட்டவர்கள்.

என்னிடத்தில் சாத்தானுக்கு இடமில்லை. என்மேல்
அவனுக்கு வல்லமை இல்லை. எனக்கு விரோதமாய்
தீர்க்கப்படாத உரிமை அவனுக்கு இல்லை.
இயேசுவின் இரத்தத்தால் சகலமும் தீர்க்கப்பட்டது.[6]

ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தாலும்,
சாட்சியின் வசனத்தினாலும் நான் சாத்தானை
மேற்கொள்ளுகிறேன். நான் மரணத்திற்காக எனது
வாழ்வை விரும்பவில்லை.[7]

எனது சரீரம் ஆண்டவருக்கே
ஆண்டவர் என் சரீரத்திற்கே[8]

ஆமென்.

[1] 1 கொரிந்தியர் 6:9
[2] எபேசியர் 1:7
[2] சங்கீதம் 107:2
[3] 1 யோவான் 1:7
[4] எபிரேயர் 13:12
[5] ரோமர் 6:13
[6] ரோமர் 8:33 -34
[7] வெளி. 12:11
[8] 1 கொரிந்தியர் 6:13

1 கொரிந்தியர் 6:9
உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?

எபேசியர் 1:7
அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது.

சங்கீதம் 107:2
கர்த்தரால் சத்துருவின் கைக்கு நீங்கலாக்கி மீட்கப்பட்டு,

1 யோவான் 1:7
அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்.

எபிரெயர் 13:12
அந்தப்படியே, இயேசுவும் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஜனத்தைப் பரிசுத்தஞ்செய்யும்படியாக நகர வாசலுக்குப் புறம்பே பாடுபட்டார்.

ரோமர் 6:13
நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்.

ரோமர் 8:33 –34
தேவன் தெரிந்துகொண்டவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர். ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்துமிருக்கிறவர்; அவரே தேவனுடைய வலதுபாரிசத்திலும் இருக்கிறவர்; நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே.

வெளி. 12:11
மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்.

1 கொரிந்தியர் 6:13
வயிற்றுக்குப் போஜனமும் போஜனத்துக்கு வயிறும் ஏற்கும்; ஆனாலும் தேவன் இதையும் அதையும் அழியப்பண்ணுவார். சரீரமோ வேசித்தனத்திற்கல்ல, கர்த்தருக்கே உரியது; கர்த்தரும் சரீரத்திற்கு உரியவர்.

For more copies of this bookmark please contact a Derek Prince Ministries office below.

DPM-India (English)
admin@derekprince.in
derekprince.com/en-in

DPM-India (Tamil)
admin@derekprince.in
www.derekprince.com/ta

DPM-Asia/Pacific
enquiries@dpm.co.nz
www.derekprince.com/en-nz

DPM-Australia
enquiries@au.derekprince.com
www.derekprince.com.au